முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 570**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

21.04.2021, புதன்கிழமை

1. அன்னதான சக்திகொண்ட அரங்கனே வாழ்க
ஆன்மீக மெய் ஞானலோகம் அமைக்க வந்த தேசிகனே வாழ்க
மன்னவர்கள் போற்றும்படி சன்மார்க்க நெறிகாட்டி
மக்களை ஞானிகளாக்க மாதவசியாய் வந்த குருராஜனே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியப்பெருமான் யானும்
மகான் உந்தனுக்கு ஞானஅறிவுரை ஆசி
தாழ்விலா பிலவ தகர் திங்களில் உரைப்பேன்
தவசி உந்தன் தர்மமே உலகை ஆளும்
3. ஆளுமப்பா உந்தன் சன்மார்க்கமே இந்த மக்களை
அழியாமை நிலைக்கு கொண்டு செல்லும்
வாழும் காலமே கலியுக மக்களெல்லாம்
வள்ளல் தன்மை பெற்று உன் வழி ஞானிகளாக
4. ஆகவே உன் மார்க்கம் அருள்புரியும்
அரங்கன் உன் அன்னதானமே வழி நடத்தும்
மிகைபட உந்தனுக்குள் என் சக்தி ஞானசக்தியாக முன்னின்று உலகோர்க்கு அருளாசி தந்துவர
வகைபட உன்னை ஏற்றமக்கள் மூலமே வையகத்தை மாற்றி மகிழ்விப்பேன் வளம்சேர்ப்பேன் இந்த உலகிற்கு பாதுகாப்பும் கூட்டுவேன்
5. கூட்டவே தொடர்ந்து ஓங்காரக்குடில் நோக்கி
குவலயத்தார் வருகை புரிதல் காண
கட்டங்கள் யாவும் விலகி சடுதி
கலியுகம் ஞானயுகமாக மாற்றம் பெறும்
6. மாற்றம் தரும் மகா தவசி நீயே
மக்களை காக்கும் மகா யோகி நீயே
ஆற்றல் தந்து யான் உன்னுள் இருக்க
அரங்கன் உன்னை தொடர்ந்து வருபவர்க்கு என் காட்சி உறுதி உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.